ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

13.04.2016 - மலர் 13, இதழ் 07




## நாட்டுக்கு நாடு நேர மாற்றம்...

காரணம் என்ன...?




## ஜூலியஸ் சீசர்

வாழ்க்கைக் குறிப்புகள்



## சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்



## ஐன்ஸ்டைன் கூறியவை உண்மையாகியது...

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான வலிவசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழிருந்து மேலாக புத்தகங்களின் நிறங்கள் பற்றிய தரவுகளை வாசித்து விடையளிக்க.

01 ஆவது புத்தகம் - நீல நிறம்


02 ஆவது புத்தகம் - சிவப்பு நிறம்

04 ஆவது புத்தகம் - பச்சை நிறம்

05 ஆவது புத்தகம் - ஊதா நிறம்

08 ஆவது புத்தகம் - மஞ்சள் நிறம்

10 ஆவது புத்தகம் - செம்மஞ்சள் நிறம்



01. நான்காவதாக இருப்பது வரலாறு பாடப் புத்தகமாகும். அதன் நிறம் யாது?

........................................................

02. இங்கு மொத்தம் எத்தனை புத்தகங்கள் உள்ளன?

........................................................

03. மஞ்சள் நிறப் புத்தகம் தொழில்நுட்ப பாடப் புத்தகமாகும். அது எத்தனையாவது புத்தகம்?

........................................................

04. மிகச் சிறிய புத்தகம் தமிழ் பாடத்திற்குரியது. அது எத்தனையாவது புத்தகம்? அதன் நிறம் யாது?

........................................................




விடுமுறைக் காலத்தில் நீங்கள் என்னென்ன விடயங்களைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பதை இங்கே குறிப்பிடுங்கள்.



★ ........................................

★ ........................................

★ ........................................

★ ........................................


★ ........................................

1. வீட்டுத் தோட்டத்தில் அப்பாவும் மகனும் என்ன செய்கின்றனர்?

1. பறவைகளைப் பார்த்து ரசிக்கின்றனர்

2. பட்டம் பறக்க விட்டுக்கொண்டிருக்கின்றனர்

3. வீட்டுப் பிராணிகளுக்கு தீனி போடுகின்றனர்



2. முயல்களுக்கு விருப்பமான மரக்கறி வகையொன்று தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ளது. அது என்ன?

........................................

3. சேவல் - கூவும் என்பது போல; கோழி - ........................................

4. வீட்டைக் காவல் செய்யும் விலங்கொன்றும் படத்தில் காணப்படுகின்றது. அது எது?

........................................

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.



-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமையும் முதுமையும் இயற்கையின் நியதியாகும். இன்று இளைஞர் - யுவதிகளாக இருப்பவர்கள், காலப்போக்கில் முதுமைப் பருவத்தினை அடைவார்கள். எனினும், முதுமையடையும் வேகம் ஆளுக்காள் வேறுபடுகின்றது. எமது உணவுப் பழக்கம், நாம் செய்யும் பணிகள், ஓய்வு, உறக்கம் போன்ற பல காரணிகள் முதுமையடையும் வேகத்தினை தீர்மானிக்கின்றன. அத்துடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறையும், முதுமையை தள்ளிப்போடுகின்றது; ஆயுட் காலத்தினை அதிகரிக்கின்றது.



# முதியவர்களுக்கு உதவி செய்யத் தயங்காதீர்!



முதுமைப் பருவத்தை அடையும்போது உடலில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. உடல் தோற்றத்தில் மாறுபாடுகள் நிகழும். எலும்புகள், தசைகள், மூட்டுகள் வலிமை இழக்கும். உள்ளுறுப்புகளின் செயற்பாடுகள் மந்தமடையும். மூளை நரம்புகள் மற்றும் உடலின் தொடர்பாடல் செயற்பாட்டுத் திறன் குறைவடையும். இயற்கையின் இந்த நியதியினை உணராத ஒரு சில சிறுவர்கள் மட்டுமன்றி, இளவயதுடையவர்களும் நடுத்தர வயதுடையோரும் கூட முதியோர்களை



கேலி பேசி மனம் நோகும் செயற்பாடுகளில் ஈடுபடுவதனைக் காணலாம். இது தவறான பழக்கங்களாகும். முதியோர்களைப் புரிந்துகொண்டு மனிதாபிமானத்துடன் அவர்களுக்கு உதவுவதே சிறந்த பண்பாகும்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

## முதுமையை புரிந்துகொள்ளுங்கள்

நாம் முதுமை பற்றி முதலில் புரிந்துகொள்ள வேண்டும். முதுமை அனைவருக்கும் பொதுவானது என்ற எண்ணம் மனதில் தோன்றும்போது, முதியவர்கள் மீது உங்களுக்கு கருணையும் அனுதாபமும் ஏற்படும். உங்களது தாத்தா, பாட்டி மற்றும் இதர முதியவர்கள் பிறரின் உதவியின்றி செயற்பட முடியாமல் இருப்பதற்கு அவர்கள் காரணமல்லர். அது இயற்கையின் நிலையாகும். இன்று முதியவர்களாக இருக்கும் பெரும்பாலானவர்கள், தமது பிள்ளைகளுக்காக வாழ்ந்து, அவர்களுக்காக அனைத்தையும் தியாகம் செய்த பெற்றோர்களாக இருப்பர். எனவே, அவர்களைப் புரிந்து நடப்பதும் பணிவிடை செய்வதும் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.



## கருணை காட்டுங்கள்

கருணை என்பது, மத வழிபாட்டு தலங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகவோ, மற்றவர்களிடம் நற்பெயர் பெறுவதற்காக மட்டுப்படுத்தப்பட்டதாகவோ இருக்கக் கூடாது. எனவே, வீட்டிலுள்ள முதியவர்களுக்கு முதலில் கருணை காட்டுவதற்கு முயலுங்கள். அந்த கருணை உணர்வினை பொது சமூகத்திற்கும் அளியுங்கள். முதியவர்கள் மீது கருணையுடன் நடந்துகொண்டால், அது நமது மனதுக்கும் இதமளிக்கும்.

## தவறான வார்த்தைகளை தவிருங்கள்

பிறரின் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் உங்களை எந்தளவுக்கு புண்படுத்துமோ, அதேயளவுக்கு மற்றவர்களையும் புண்படுத்தும் என்பதனை உணருங்கள். முதியவர்களின் மனதினை நோகடிப்பதானது வெறுக்கத்தக்க செயலாகும். எனவே, அவ்வாறன புண்படுத்தல்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



## இயலுமான உதவிகளை செய்யுங்கள்

முதியவர்களின் உடல் - உள ஆரோக்கியத்திற்காக பல வழிகளில் நாம் உதவ முடியும். உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான வசதிகளை வழங்குதல், சுகவீனங்களின் போது மருத்துவ உதவிகளை செய்தல், மத ரீதியிலான யாத்திரைகளுக்கு உதவி செய்தல், குளிப்பாட்டுதல், உணவூட்டுதல், பாதையைக் கடக்க உதவி செய்தல், சமூக ரீதியிலான செயற்பாடுகளுக்கு உதவுதல் என்பன முதியோர்களுக்கு நாம் செய்யக்கூடிய உதவிகளுள் சிலவாகும்.

இவை மிகச் சிறிந்த நற்காரியமாகவே கருதப்படுகின்றன. இதனால் நற்சிந்தனைகள் மேம்படும். மனதில் குறைகள் நீங்கி, உண்மையான மகிழ்ச்சி ஏற்படும்.

எனவே, முதியவர்களுக்கு உதவி செய்வதற்கு எப்போதும் முன்நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வார்த்தை போதுமே

ஒரு கல்யாண மண்டபத்தில் விதவிதமான உணவுப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. எந்த உணவை சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்துவிடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி ஒன்று.

அந்த நேரத்தில் மதில்மீது அமர்ந்திருந்த ஒரு காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியினை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப்போனது. காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது. "காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். ஆனால், நீங்கள் என்னைப் பிடித்துக்கொல்ல நினைக்கிறீர்களே. என்மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா?" என்று அன்போடு கேட்டது.

அதனைக் கேட்ட காகம், "எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகின்றது. அதுதான், உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடு" என்று கண்டிப்புடன் கூறியது.

> எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகின்றது. அதுதான், உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடு என்று கண்டிப்புடன் கூறியது காகம்.

"காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒருவித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக்கொண்டால் அது என்ன பாடுபடும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர் பிச்சை கொடுங்களேன்" என்று பணிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனம் இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, "எலியே! உன்னைப் பார்த்தபோது எப்படியாவது உன்னை சாப்பிட்டுவிட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது. ஆனால், உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிறபோது அந்த எண்ணம் என் மனதைவிட்டு அகன்றுவிட்டது. உனது சாதுர்யமான பேச்சினால் நான் மனம் மகிழ்ந்தேன். இனிமேல் நீ அச்சமின்றி செல்லலாம்!" என்று கூறியபடி காகம் வேறு இரையைத் தேடிப் பறந்து சென்றது.




எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக்கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்துகொண்டது. தொடர்ந்தும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அந்த எலி உறுதி பூண்டது.

# புத்தியைத் தீட்டு

ராமுவும் சோமுவும் நண்பர்களாவர். இருவரும் தமது தொழிலுக்காக மரம் வெட்டுவதற்கு காட்டிற்குத் தினமும் செல்வார்கள். மாலை இருவரும் வீடு திரும்பும்போது, ராமுவிடம் அதிகமான விறகு இருப்பதையும் மேலும் அவன் அதிகம் களைப்படையாமல் இருப்பதையும் சோமு அவதானித்தான். இது சோமுவிற்கு வியப்பாக இருந்தது. நம்மைப் போலத்தானே அவனும், அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமாகின்றது, என்று எண்ணினான். ஒருநாள் ஆர்வம் தாங்காமல் அதை ராமுவிடமே கேட்டுவிட்டான்!

"ராமு இந்த விறகுகளை நீ எவ்வாறு வெட்டினாய் என்று கேட்டான் சோமு! "இடைவிடாமல் வெட்டிக்கொண்டே இருந்தேன்" என்று பதிலளித்தான் ராமு. "சிறிது ஓய்வு இல்லாமலும் களைப்படையாமலும் இவ்வளவு விறகுகளை எப்படி உன்னால் வெட்ட முடிகிறது?" என்று ஆர்வத்துடன் கேட்டான் சோமு.



"நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன்" என்றான் ராமு!

மறுநாள் சோமுவும் அதேபோல் ஓய்வு எடுத்து மரத்தை வெட்டினான், இருப்பினும் அவனால் ராமு அளவுக்கு மரத்தை வெட்ட முடியவில்லை. இதனால், மறுநாள் மரம் வெட்டும்போது, ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான் சோமு.


> இது சோமுவிற்கு வியப்பாக இருந்தது. நம்மைப் போலத்தானே அவனும், அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமாகின்றது, என்று எண்ணினான்.

மறுநாள் இருவரும் மரம் வெட்டப் பிரிந்து சென்ற பின், ராமுவை பின் தொடர்ந்து சென்றான் சோமு. அப்போது நண்பனான ராமு அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால், அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாரியை தீட்டிக் கொண்டிருந்தான். இதனைப் பார்த்த சோமு அதிகளவு மரம் வெட்டும் ராமுவின் இரகசியத்தைப் புரிந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிதே பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு





உலக வாழ் தமிழ் மக்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி சித்திரை புது வருடத்தை வெகு விமர்சையாக கொண்டாடவுள்ளார்கள். இச்சித்திரை புது வருடமானது 'துன்முகி' எனும் பெயரால் அழைக்கப்படுவதாக ஜோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. இதன்படி, இவ்வருட கணிப்பாக சூரியன் தனது ஒளியாற்றலை மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு வெளிப்படுத்துமென கூறப்படுகின்றது. இத்தினத்தை தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் வெகு விமர்சையாக கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

## புது வருட முதல் நாள்

புது வருடத்தினை முன்னிட்டு வீட்டிலுள்ள பெண்கள் வீட்டினை தூய்மைப்படுத்தி, தின் பண்டங்களை தயார் செய்வார்கள். ஆடவர்களோ வீட்டிற்கு தேவையான பொருட்களையும் புத்தாடைகளையும் வாங்கி வருவதுடன், ஏனைய தயார்படுத்தல்களிலும் ஈடுபடுவார்கள்.


## மருத்து நீர்

இந்து ஆலயங்களில் தயாரிக்கப்படும் இந்நீரானது, சிறந்த மூலிகை நீராகும். இதற்காக மாதுளம் பூ, தாமரைப்பூ, தாழம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார், செங்கழு நீர், வில்வம், அறுக்கு, பீர்க்கு, பால், கோசலம்,கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி, சுக்கு ஆகிய அனைத்தும் நீரில் இட்டு காய்ச்சப்படும். புது வருட புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையையும் வைத்து மருத்து நீரினை தேய்த்து குளித்தால் புத்தாண்டில் சிறந்த பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கையாகும்.

## புத்தாடை அணிதல்

ஒவ்வொரு வருடப் பிறப்பிலும் ராசிக் கணிப்பின்படி அணிய வேண்டிய ஆடைகளுக்கான நிறம் அறிவிக்கப்படும். அதன்படி, இவ்வருடம் பிறப்பில் வெள்ளை, பச்சை நிறங்களிலான ஆடை அணிவது சிறந்ததாகுமென ஜோதிட கணிப்புகள் கூறுகின்றன.





## இறை வழிபாடு

புதுவருடமானது அனைவருக்கும் சிறந்த பலனை தரவேண்டும் என்ற நோக்கில் அனைவரும் ஆலய வழிபாடுகளை மேற்கொள்வர். அதில் சிலர் எதிர்வரும் காலங்களில் தங்களின் கிரகநிலைகள் எவ்வாறு உள்ளதென புது வருட தினத்தில் பஞ்சகம் பார்ப்பது வழக்கமாகவுள்ளது. அத்தோடு உறவினர், நண்பர்கள், அயலவர்கள் என அனைவருக்கும் தின்பண்டங்களையும் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொள்வார்கள்.

## கலை கலாசார நிகழ்வுகள்

சித்திரை புது வருடமானது தமிழ், சிங்கள மக்களிடையே சிறப்பாக கொண்டாடப் படுவதால் நாட்டின் பல பகுதிகளில் கலை கலாசார நிகழ்வுகள் பல சமூக ஒற்றுமையோடு இன்றும் நடைபெறுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதன்போது பாரம்பரிய நிகழ்ச்சிகளான போர் தேங்காய் அடித்தல், கிளித்தட்டு, பல்லாங்குழி, ரபான் அடித்தல், துவிச்சக்கரவண்டி ஓட்டம், மரதன் ஓட்டம், தலையணை சண்டை, வழுக்கு மரம் ஏறுதல் என பலவகை போட்டிகளை வைத்து மகிழ்வுடன் சித்திரை புதுவருட கொண்டாட்டங்களை இனிதே நிறைவு செய்வார்கள்.

உங்கள் அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்





## சித்திரை புதுவருட கணிப்பு



360 பாகை கொண்ட விண்வெளி மண்டலம் வட்ட வடிவமாகும். இவ் வட்ட வடிவத்தை 12 மாதங்களால் பிரித்து வரும் 30 பாகைகளைக் கொண்டதுதான் ஒரு மாதம். இவ்வாறு பிரித்த 0 பாகையில் ஆரம்பிக்கும் தளம் ஜோதிட கணிப்பின்படி மேஷ ராசி என்பதால் தமிழர் வழக்கப்படி சித்திரை 1 ஆம் திகதியான ஏப்ரல் 14 ஆம் திகதியே சித்திரை புதுவருட பிறப்பாக கணிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நாட்டில் அதிகரித்துச் செல்லும் வெப்பநிலை அனைவருக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்த வெப்பம் மழை இன்மை காரணமாக அதிகரித்துள்ளதுடன், இதனால் பல நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. மற்றைய ஆண்டுகளை விட, இந்த இந்தளவு வெப்பநிலை நிலவுவது ஏன்? இதனால் ஏற்ப எவை? என்பது பற்றி பார்ப்போம்.




## பூமி வெப்பமடைவது ஏன்?

மனிதர்களின் தவறான செயற்பாடுகளும், சுற்றாடல் மாற்றமும் பூமியின் வெப்பநிலையை நாளுக்கு அதிகரிக்கின்றது. பூமியின் வெப்பநிலை அதிகரிப்புக்கு உச்சமடையும் சூரியன் மற்றுமொரு கார

## கெரிங்டன் செயற்பாடு என்றால் என்ன?

1859ஆம் ஆண்டு பிரித்தானிய நாட்டு வானியல் விஞ்ஞானியான ரிச்சர்ட் சி. கெரிங்டன் என்பவர் சூரியனிலிருந்து வெளிவரும் அதிக சக்தி குறித்து தகவல்களை வெளியிட்டார். சூரியனிலிருந்து வெளியாகும் அதிக வெப்பம் காரணமாக, பூமியில் சிற்சில பாதிப்புகள் ஏற்படலாம் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். 1859ஆம் ஆண்டு சூரியனிலிருந்து வெளியான அதிக வெப்பம் காரணமாக பூமியில் ஏற்பட்ட பாதிப்புகளாவன;

வடதுருவத்தில் விடியற்காலை 4 மணிக்கு பசுமை நிறத்தில் தென்பட்ட ஒளி வெள்ளம், மற்றும் சூரியக் கதிர்களினால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகளினால் அன்று 'டெலெக்ஸ்' இயந்திரத்தினைப் பயன்படுத்தியவர்களுக்கு அதிக மின் அதிர்ச்சி ஏற்பட்டதாக வரலாறு சுட்டிக்காட்டுகின்றது.

சூரியப் புயலாக வெளியான சக்தி 'கொரோனல் மாஸ் இரெகஷன்' என அழைக்கப்படும். இந்த சூரியப் புயலுடன் எக்ஸ் கதிர்கள், அணுக்கதிர்கள், காந்தக் கதிர்கள் கெமா கதிர்கள் போன்ற பல கதிர்கள், பூமியினை நோக்கி வரும்.

ஆனால் இது போன்ற கதிர்கள் பூவி சுற்றுப் பகுதிக்குள் பிரவேசித்தால் செய்மதி தொழிநுட்பம், ஜி.பி.எஸ் தொழிநுட்பம் என்பனவற்றுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் இதனால், தொடர்பாடல், சுகாதார சேவைகள், போக்குவரத்து சேவைகள், எரிபொருள் விநியோகங்கள், நிதி வசதிகள் என்பன பாதிப்படைந்து 2.6 டிரில்லியன் அமெரிக்க டொலர் இழப்பினை உலகம் எதிர்கொள்ளும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.




## அதிக வெப்பம் சூரியப் புயலின் ஆரம்பமா?

கெரிங்டன் குறிப்பிட்ட செயற்பாடு 150 வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் என்று விஞ்ஞானிகள் அனுமானிக்கின்றனர். இதன்படி 2012 ஆம் ஆண்டு சிறிய சூரியப்புயல் ஒன்று ஏற்பட்டது. தற்போது ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பு கெரிங்டன் செயற்பாட்டின் ஆரம்பமா? என்றும் கருதப்படுகின்றது.

## அதிக சூரிய ஒளி ஆபத்தானது

பொதுவாக, அதிக சூரிய ஒளியில் காந்த கதிர்கள், எக்ஸ் கதிர்கள், கெமா கதிர்கள் உள்ளடங்கியுள்ளன. இவை மனிதனின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பவை. மேலும் அதிக வெப்பம் காரணமாக, சுற்றாடலில் வைரஸ் மற்றும் பக்டீரியாக்கள் உயிர்ப்படையும் வாய்ப்புகள் அதிகமாகும். இதனாலேயே இக்காலப்பகுதியில் வைரஸ் நோய்கள் தீவிரமாகப் பரவும் வாய்ப்புண்டு. அத்துடன், சருமம் தொடர்பான நோய்களும் அதிகரிக்கின்றன.




## வைரஸ் நோய்கள்

அதிக வெப்பம் எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கும். இதனால் வைரஸ் நோய்கள் மிக வேகமாக பரவும். இவ்வாறே மழைக் காலத்திலும் இவை பெரிதும் பரவும். அதிக வெப்பக்காலத்தில் தடிமல், காய்ச்சலுடன் சளியும், இருமலும் ஏற்படும்.

## நோய் அறிகுறிகள்

குறைவான காய்ச்சலுடன் மூன்று வாரங்கள் வரை கடும் சளியுடன் இருமல், தடிமன் தொடரும். இதனால், நோயாளி சுவாசிக்கும் போது, இரைச்சல் ஒலி ஏற்படும். உடலிலிருந்து வைரஸ் நீங்கும்வரை இந்த இருமல் காணப்படும். எவ்வளவுதான் சிகிச்சை எடுத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந் ஆண்டில்
றிம் நோய்கள்

நாள்
ளமாகும்.



நீர் வழிகையி
லும். இருமும்
போது சளி வெளியேறும்
சந்தர்ப்பங்களிலும்
உடலில் உள்ள நீரே
வெளியேறுகின்றது. இதனால்
அதிகளவு தண்ணீரை
அருந்த வேண்டும். மேலும்
இயற்கைப் பழச்சாறுகளான
எலுமிச்சை, தோடம்
சாற்றையும்
அருந்த வேண்டும்.

குணமாகாத
தன்மை
காணப்படும்.

### சிகிச்சை

வைரஸ் காய்ச்சல்
இருக்கும் போது,

### அதிக வெப்பத்தால் சருமத்தில் ஏற்படும் மாற்றங்கள்

1. சருமம் வறட்சி அடையும்.
2. சருமத்தின் மேல் பகுதிகளில் கொப்பளங்கள், வியர்வைக் கட்டிகள், வெடிப்புகள் ஏற்படும்.
3. சருமத்தில் எரிச்சல் தன்மை ஏற்படும்.

### சருமத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

1. தினந்தோறும் 3 லீற்றர் நீரினை அருந்த வேண்டும்.
2. வெளியிடங்களுக்கு செல்லும்போதும், வீட்டில் இருக்கும்போதும் மொய்ஸ்ச்சரைஸிங் கிறீம்களை பூசுதல் வேண்டும்.
3. வெளியிடங்களுக்கு செல்லும் போது சன்கிறீம் பூசுதல் வேண்டும்.




'அதிக வெப்பம் எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கும். இதனால் வைரஸ் நோய்கள் மிக வேகமாக பரவும். மழைக் காலத்திலும்கூட வைரஸ் நோய்கள் பெரிதும் பரவும். அதிக வெப்பக் காலத்தில் தடிமன், காய்ச்சலுடன் சளியும், இருமலும் ஏற்படும்'

# ன் இவ்வாறு வெப்பம் அதிகரிக்கின்றது...?

அதிகளவு தண்ணீர் அருந்துதல் வேண்டும். ஐஸ் தண்ணீர் அருந்துவது நல்லதல்ல. தடிமன் காரணமாக, மூக்கிலிருந்து




எனினும் அதிகமாக சுத்தமான தண்ணீரை அருந்துவதே சிறந்தது. இதற்கு காரணம் எமது உடலில் வெப்பத்தைக் குறைத்து குளிர்மைப்படுத்தி உடலின் தொழிற்பாடுகளை சீர்படுத்த நீரினால்தான் முடியும்.

### பருத்தி ஆடைகளை அணியுங்கள்

இக்காலப்பகுதியில் நீங்கள் அணியும் ஆடைகள் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும். எப்பொழுதும் இலகுவான வெண்ணிறப் பருத்தி ஆடைகளை அணியுங்கள்.

### அதிக சூரிய ஒளி சருமத்திற்கு ஆபத்து

சருமத்தில் இயற்கையாகவே மெலனின் என்ற நிறமூட்டி உள்ளது. இந்த மெலனின் உடலுக்கு சூரிய ஒளியினால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்க்கின்றது. அதிக சூரிய ஒளி காரணமாக, இந்த மெலனினுக்கு பாதிப்பு ஏற்பட்டு சருமப்புற்று நோய்கள் ஏற்படக் கூடும். தொடர்ச்சியாக சூரிய ஒளிபடுவதனால் மெலனின் நிறம் மாறி சருமத்தில் சுருக்கங்கள் விழ ஆரம்பிக்கும். எனவே, வெயிலில் செல்லும் போது குடையைக் கொண்டு செல்ல மறவாதீர்கள்



## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ...............................................

**01) கீழ் காணும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள். நீங்களாகவே அதிகாலையில் எழும்புங்கள். பாடசாலைக்கு உரிய நேரத்திற்குச் செல்லுங்கள். உங்கள் பொருட்களை அதற்குரிய இடத்தில் வையுங்கள். தினமும் குளியுங்கள். நன்றாக நீர் அருந்துங்கள். எழுந்ததில் இருந்து பாடசாலை செல்லும் வரை உங்கள் வேலைகளை நீங்களே செய்யுங்கள். பாடசாலையில் இருந்து வீடு திரும்பியதும் பாதணிகள், புத்தகப்பை, உடைகள் போன்றவற்றை உரிய இடத்தில் வையுங்கள். மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள். பெற்றோரிடம் உண்மையாக இருங்கள். சிட்டுக்குருவி போல் சுறுசுறுப்பாக இயங்குங்கள்.

01. தினமும் எத்தனை மணி நேரம் உறங்க வேண்டும்?
............................................................
02. பந்தியிலுள்ள உவமானம் ஒன்று தருக.
............................................................
03. பந்தியிலுள்ள இணைமொழி யாது?
............................................................
04. இடப்பெயர் ஒன்றைக் குறிப்பிடுங்கள்.
............................................................
05. முக்கியமாக எப்பொருட்களை அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும்?
............................................................
06. யாரிடத்தில் உண்மையாக இருக்க வேண்டும்?
............................................................

**02) சேர்த்தெழுதுக.**

01. எம் + உணர்வில் = ..............................................
02. நாடு + பற்று = ..............................................

**03) பிரித்தெழுதுக.**

01. குடியரசு = .............................. + ...........................
02. எமக்குண்டு = ............................ + ......................

**04) பின்வரும் சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

01. வருடம் தோறும் ஒருவர் பிறந்தநாளன்று எடுக்கப்படும் விழா - ..........................................
02. காடும் காடு சார்ந்த இடமும் - ..............................

**05) கருத்தினை தமிழில் எழுதுக.**

01. who is shouting? - ..........................................
02. hurry up please - ..........................................

**06) பின்வரும் சிங்கள சொற்றொடரின் கருத்தினை தமிழில் எழுதுக.**

01. லங்கட்ட என்ன - ..........................................
02. மட்ட யன்ன தென்ன - ..........................................




**07) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. வீட்டுத்தோட்டத்திலுள்ள கழிவுகளை நாம்;
 1. வெற்றுக்காணியில் வீசிவிட வேண்டும்
 2. கூட்டெரு தயாரிக்கப் பயன்படுத்த வேண்டும்
 3. ஒன்று சேர்த்து தீயிட்டு எரிக்க வேண்டும்

02. எமது நாட்டில் புகையிரதப் போக்குவரத்து பற்றிய தவறான கூற்று;
 1. பொதுச் சேவை
 2. கூடுதலான பிரயாணிகள் பயணம் செய்யலாம்
 3. எமக்குத் தேவையான எல்லா இடங்களுக்கும் செல்ல முடியும்

03. நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு நாம் செய்யக்கூடாதது;
 1. நீரை வீண் விரயம் செய்யாது பாதுகாத்தல்
 2. நீரை சேமித்து வைத்தல்
 3. காடுகளை அழித்தல்

04. பெண்கள் தமது கைகளில் மலர்த்தட்டுகளையும் மலர்களையும் ஏந்தியவாறு உள்ள ஓவியங்களைக் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் எது?
 1. சீகிரியா 2. தம்புள்ள 3. அனுராதபுரம்

05. தடித்த முட்களைக் கொண்ட தாவரம் யாது?
 1. மனத்தக்காளி 2. தூதுவளை 3. நாகதாளி

06. காற்றுமூலம் பரம்பலடையும் வித்துக்களின் பண்புகளில் ஒன்று;
 1. மயிர் போன்ற அமைப்புக்களைக் கொண்டிருத்தல்
 2. காற்றுத் துளைகள் காணப்படுதல்
 3. நிறைகூடியதாகக் காணப்படுதல்

07. வேரின்மூலம் இனம் பெருக்காத தாவரம் எது?
 1. ஈரப்பலா 2. வில்வம் 3. பனை

08. உடலுக்குத் தேவைப்படும் புரதத்தைப் பெறுவதற்கு உகந்த உணவு எது?
 1. வல்லாரை 2. பருப்பு 3. கெரட்

09. கற்பூரவள்ளி எனக்கூறப்படக்கூடிய தாவரம்;
 1. மரக்கறி வகை 2. பழவகை 3. மூலிகை

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(ஏப்ரல் 6 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 04. 3 | 07. 2 | 10. 1 |
| 02. 1 | 05. 2 | 08. 2 | 11. 3 |
| 03. 3 | 06. 3 | 09. 2 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




noolaham.org | aavanaham.org

# கட்டுவன கோட்டை




கட்டுவன பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள இந்த கட்டுவன கோட்டை ஒல்லாந்தரால் அக்கால கட்டத்தில் கட்டப்பட்டது. இயற்கைப் பாதுகாப்பு அரண்களுடன் கூடிய இப்பிரதேசத்தில் கோட்டை ஒன்றை அமைப்பதில் ஒல்லாந்தர் முனைப்புடன் செயல்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது 1697 ஆம் ஆண்டளவில் கட்டி எழுப்பட்டது. ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி பிரதேசமான கண்டி இராச்சியத்தின் தென் திசை எல்லைக்கருகில் கட்டப்பட்ட மிகப் பெரிய ஒல்லாந்தக் கோட்டையாக இது கருதப்படுகின்றது. இக்கோட்டைக்குள் 16 அடி உயரமும் 11 அடி அகலமும் கொண்ட மேல்நோக்கி எழுந்த இரு கோபுரங்களை காணலாம். இக்கோட்டைக்குள் நுழைய ஒரே ஒரு வாசல் மட்டுமே உண்டு. கோட்டை முழுவதும் மேல்பூச்சு பூசப்பட்ட சுவர்களுடன் கூடிய கட்டடமாகவே காட்சி அளிக்கின்றது. இக்கோட்டை வாயிலில் இரு காவலரண்கள் உள்ளன. இந்த காவல் அரணில் ஆறு பிரங்கிகள் இருந்ததாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கோட்டையின் வெளிச் சுவரின் ஒரு பக்க நீளம் 150 அடியாகும். கோட்டையின் சுற்று மதில் 20 அடி உயரமாகும். கோட்டையின் உள்ளே சதுர அமைப்பிற்கு மத்தியில் முற்றம் ஒன்று உள்ளது. கோட்டை மதிலோடு இணைந்து பல கட்டடங்கள் உள்ளன. இக்கோட்டை 1761 ஆம் ஆண்டு வரையே ஒல்லாந்த படையினரால் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.


(-அ)












கோட்டை வாயில் புனருத்தாரணத்திற்கு முன்


கோட்டை வாயில் புனருத்தாரணத்திற்கு பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காகங்களின் உபாயம்





காகங்கள் புத்திக்கூர்மை மிக்கவை என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனை உறுதிப்படுத்தும் வகையிலான ஒரு செயற்பாட்டினை ஜப்பானில் வாழும் ஒரு வகை காகங்களிடையே காணலாம். இந்த காகங்கள் கடினமான மேலோடு கொண்ட கொட்டைகளினுள் இருக்கும் பருப்புகளை உணவாகக்கொள்கின்றன. ஆனால், அந்த கொட்டைகளை உடைத்தால்தான் அதனுள் இருக்கும் பருப்புகளை உட்கொள்ளலாம். எனவே, இவை அதற்காக விசித்திரமான-அறிவுபூர்வமான ஓர் உபாயத்தைக் கையாள்கின்றன.

அதாவது, இந்தக் காகங்கள் தமது அலகால் கொட்டைகளை கௌவிச் சென்று வாகனங்கள் செல்லும் பாதைகளில் அமைக்கப்பட்டிருக்கும் சமிக்ஞைக் கம்பங்களின் மேல் அல்லது மின்கம்பங்களின் மேல் நின்றவாறு அவற்றை கீழே போடும். அப்போது வேகமாக வரும் வாகனங்களின் சக்கரத்தில் அரைபட்டு அந்த கொட்டைகள் உடையும். பின்னர், பாதசாரிகள் பாதையைக் கடப்பதற்கான சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்ததும், காகங்களும் கீழே வந்து உடைந்த கொட்டைகளை எடுத்துச் சென்று அதனுள் இருக்கும் பருப்புகளை உட்கொள்ளும்.




உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
விலை Rs. 10/=
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகில் நாட்டுக்கு நாடு நேரம் வேறுபட்டுள்ளதை நாம் அறிவோம். உதாரணமாக, இலங்கையில் நண்பகல் 12 மணியாக இருக்கும்பொழுது, இங்கிலாந்தில் காலை 6:40 மணியாக இருக்கும். அவ்வாறே, உலகில் சில நாடுகளில் பகலாக இருக்கும் வேளை, வேறு சில நாடுகளில் இரவாக இருக்கும். இந்த நேர வித்தியாசத்திற்கும் இரவு-பகல் வேறுபாட்டிற்கும் மூல காரணம் பூமி தன்னைத் தானே சுற்றுவதோடு, சூரியனையும் சுற்றி வருவதே ஆகும்.

பூமி, சூரியனில் இருந்தே ஒளியைப் பெறுகின்றது. பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றுவதற்கு ஒருநாள் அதாவது, 24 மணி நேரம் எடுக்கின்றது. இதனை 'புவிச் சுழற்சி' என்பர். இச்சுழற்சியின்போது, சூரிய ஒளிபடும் நாடுகளில் பகலாகவும், அதற்கு நேரெதிரே இருக்கும் நாடுகளில் இரவாகவும் இருக்கும். இதனடிப்படையிலேயே நேரம் என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

முற்காலத்தில் இந்த நேரமாற்றங்கள் உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படாத காரணத்தால், பல முரண்பாடுகளும் பாரிய பிரச்சினைகளும் ஏற்பட்டன. அதன்பின் உலக நாடுகள் பல ஒன்றிணைந்து இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்தன. அந்த பொது இணக்கப்பாட்டின்படி, உருவானதுதான் 'நியம நேரமாகும்'.








## கற்பனைக் கோடுகள்

பூமியில் நாடுகளின் அமைவிடத்தையும் அந்த நாடுகளின் நேரத்தையும் சரியாக கணிப்பதற்காக மனிதனால் கற்பனையாக வரையப்பட்ட கற்பனைக் கோடுகளே அகலாங்கும் நெட்டாங்கும் ஆகும்.

## அகலாங்கு

அகலாங்கு என்பது, மேற்கு-கிழக்காக கிடையாக வரையப்பட்ட கற்பனைக் கோடாகும். இவற்றை 'அகலக்கோடுகள்' என்றும் அழைப்பர். இந்த அகலக் கோடுகளில் பூமியின் மையப் பகுதியில் அமைந்துள்ள ரேகை 'பூமத்திய ரேகை' அல்லது 'மத்திய கோடு' எனப்படுகின்றது.

## பூமத்திய ரேகை

பூமத்திய ரேகை என்பது, 0 பாகையில் அமைந்துள்ள ஒரு கற்பனைக் கோடாகும். இந்த ரேகையானது, பூமியை சரி பாதியாகப் பிரிக்கின்றது. அதன் வட பகுதி 'வடவரைக் கோளம்' என்றும் தென்பகுதி 'தென்னரைக் கோளம்' என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த வடவரைக் கோளத்தில் வரையப்பட்டுள்ள கோடுகள் 'வட அகலாங்கு' என்றும், தென்னரைக் கோளத்தில் வரையப்பட்டுள்ள கோடுகள் 'தென் அகலாங்கு' என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த அகலாங்குகள் பூமத்திய ரேகையிலிருந்து வடக்கே $90^0$ வரையும் தெற்கே $90^0$ வரையும் செல்கின்றன.

## நெட்டாங்கு


நேரத்தைக் கணிப்பதற்காக, பயன்படுத்தப்படும் மற்றுமொரு கற்பனைக் கோடுதான் 'நெட்டாங்கு' ஆகும். இதனை 'நெடுங்கோடு' என்றும் அழைப்பர். இது வடக்கு- தெற்காக அமைந்துள்ள கற்பனைக் கோடுகள் ஆகும். அகலாங்குகளை குறுக்காக ஊடறுத்துச் செல்கின்றன. நெட்டாங்கின் மத்திய நெடுங்கோடான 0 பாகை நெடுங்கோட்டை 'கிறீன்விச் ரேகை' என அழைப்பர். உலகில் ஒரே நெட்டாங்கில் அமைந்திருக்கும் அனைத்து நாடுகளும் ஒரே நேரத்தையே காட்டும்.



## கிறீன்விச் ரேகை

இங்கிலாந்தின் கிறீன்விச் நகரத்தின் ஊடாக பூமியின் வடக்கிலிருந்து தெற்காக அமைந்துள்ள நியம ரேகையே 'கிறீன்விச் ரேகை' ஆகும். இங்கிலாந்தின் கிறீன்விச் நகரை ஊடறுத்து அமைந்துள்ளமையால் இப்பெயர் வரக்காரணமாயிற்று. அப்பகுதியை 0 பாகையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# ...க்கு நாடு நேர வேறுபாட்டிற்கு காரணம் யாது?

கொண்டு அதற்கு கிழக்கே $180^o$ வரையும் மேற்கே $180^o$ வரையும் நெட்டாங்கு செல்கின்றது. 0 பாகைக்கு கிழக்கே உள்ள அனைத்து நெட்டாங்குகளும் 'கிழக்கு நெட்டாங்கு' என்றும், மேற்கே அமைந்துள்ள அனைத்து நெட்டாங்குகளும் 'மேற்கு நெட்டாங்கு' என்றும் அழைக்கப்படுகின்றன.




தற்பொழுது உலகில் இந்த ரேகையை அடிப்படையாகக் கொண்டே நேரங்கள் கணிக்கப்படுகின்றன. பூமியின்மீது சூரியனின் ஒளி உச்சமாகப் படும் நேரத்தை நண்பகல் 12:00 மணியாக கருதுவர். கிறீன்விச் மத்திய நெட்டாங்கில் இருந்து கிழக்குப் பக்கமாக நேரம் அதிகரிப்பதோடு,மேற்கு நோக்கிச் செல்லச் செல்ல நேரம் குறைவடையும். அவ்வாறு கூடுவதும் குறைவதும் ஒரு பாகை நெட்டாங்கு வித்தியாசத்திற்கு 4 நிமிடங்கள் என்ற அடிப்படையில் இருக்கும்.

## நியம நேரம்

கிறீன்விச் ரேகையை மையமாகக் கொண்டு பூமியை 24 வலயங்களாகப் பிரித்தே நியம நேரத்தை உருவாக்கியுள்ளனர். இரண்டு ரேகைகளுக்கு இடையிலான இடைவெளி 150 பாகைகளாகும். ஒவ்வொரு நேர வலயத்தின் மையங்கள் இந்த மத்திய ரேகையிலிருந்து ஆரம்பமாகும். ஒவ்வொரு வலயத்தினதும் நேரம் ஒரே விதமாகவே மாறுபடும். அதற்கமைய, கிழக்குத் திசைநோக்கிப் பயணிக்கும்போது, ஒரு மணி நேரம் குறைவடையும். மேற்கு நோக்கிப் பயணிக்கும்போது ஒரு மணி நேரம் அதிகரிக்கும்.





## முக்கியத்துவம்

19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் ஐக்கிய ராச்சியத்தின் முதலாவது புகையிரத நேர அட்டவணையை கிறீன்விச் மத்திய நெட்டாங்கு நேரப்படியே தயாரித்தனர். அது சர்வதேச ரீதியில் நேர இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முன்னதாகும். ஐக்கிய அமெரிக்கா வொஷிங்டனில் ஒரு நியம நேரத்தையும், பிரான்ஸ் தனது நாட்டில் ஒரு நியம நேரத்தையும் கடைப்பிடித்தன. எனினும், வொஷிங்டனில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் புகையிரதத்திற்கு நேரம் குறித்ததில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இந்நாடுகளுக்கிடையே போக்குவரத்துகள் அதிகரித்ததோடு, கொடுக்கல்- வாங்கல்களும் அதிகரிக்கவே நிலமை மேலும் மோசமடைந்தது. அதனால், நேரம் குறித்து பொது இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.


அதன்படி, 1880 இல் நியம நேரம் உருவாக்கப்பட்டது.

## நேர வலயம்

கடிகாரங்களில் நேரமானது, கிறீன்விச் நேரத்தை மத்திய நேரமாக கருதியே அமைக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளில் நேரங்கள் கிறீன்விச் நேரத்தை அடிப்படையாகக் கொண்டே நியமம் செய்யப்பட்டுள்ளன. எனினும், இந்த நியம நேரங்களில் சிறிதளவில் மாற்றமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. இந்த மாற்றங்களை சீர்படுத்துவதற்காக பூமியின் மேற்பரப்பை 24 வலயங்களாகப் பிரித்துள்ளனர். இவற்றின் எல்லையாக பூமத்திய ரேகை கருதப்படுகிறது. அந்த வலயத்தை நேர வலயம் (Time Zone) என அழைக்கின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஈர்ப்பு அலைகளைக் காட்டும் ஓவியமொன்று



இரு கருந்துளைகள் மோதும் விதத்தைக் காட்டும் ஓவியமொன்று



# 101 வருடங்களுக்கு முன்னர் ஐன்ஸ்டைன் கூறியவை உண்மையானது...!

**கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி வரலாற்றில் முக்கியமானதொரு நாளாக கருதப்படுகின்றது. காரணம், பிரபஞ்சத்தில் 'ஈர்ப்பு அலைகள்' இருக்கலாம் என இற்றைக்கு 101 வருடங்களுக்கு முன்னர் உலகப் புகழ் விஞ்ஞானியான எல்பர்ட் ஐன்ஸ்டைன் வெளியிட்டிருந்த கருதுகோள் பெப்ரவரி 12 ஆம் திகதி விஞ்ஞானிகளால் உறுதிப்படுத்தப்பட்டமையினாலாகும்.**

'ஈர்ப்பு அலைகள்' இருப்பதாக 1915 ஆம் ஆண்டில் ஐன்ஸ்டைன் கருத்து வெளியிட்டிருந்த போதும், 2015 ஆம் ஆண்டு வரை இந்த ஈர்ப்பு அலைகளைக் கண்டுகொள்ளும் வாய்ப்பு விஞ்ஞானிகளுக்கு கிட்டவில்லை. எனினும், தொழில்நுட்பம் நாளுக்கு நாள் முன்னேறிச் செல்லும் நிலையில், ஈர்ப்பு அலைகளைத் தேடி பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி இரு ராட்சத கருந்துளைகள் ஒன்றோடொன்று மோதியதன்மூலம் ஈர்ப்பு அலைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர்.

## கண்டுபிடிப்பு


ஐன்ஸ்டைனின் சார்புக் கொள்கையின்படி, இந்த ஈர்ப்பு அலைகள் தோன்றியது புவியில் இருந்து 1.3 பில்லியன் ஒளி வருடங்கள் தூரத்தில் ஆகும். பெரும் வெடிப்புக்குப் பின்பே இது உருவானது என்ற கொள்கையை உறுதிப்படுத்த இந்த கருந்துளைகளின் மோதல் சான்றாக அமைகின்றது. அந்தவகையில், அமெரிக்காவின் கலிஃபோனியா தொழில்நுட்ப நிறுவனத்தின் பௌதிக விஞ்ஞானிகளே, ஈர்ப்பு அலைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தியவர்கள் ஆவர்.

## சார்புக் கொள்கைகள்

ஐன்ஸ்டைன் இரு கொள்கைகளை வெளியிட்டார். பிரபஞ்சம் குறித்த விஞ்ஞானிகளின் கருத்துக்கள் புரட்சிகரமாக உருவாவதற்கு அவரின் இந்த கொள்கைகளே காரணமாக அமைந்தன. சிறப்புச் சார்புக் கொள்கை (special theory of relativity) மற்றும் பொதுச் சார்புக் கொள்கை (general theory of relativity) ஆகியவையே அந்த கொள்கைகளாகும். இத்தாலிய வானவியலாளரான கலிலியோ கலிலியின் சார்பு அடிப்படை வாதமே இவ்விரு சார்புக் கொள்கைகளுக்கும் அத்திவாரமாக அமைந்தது.



பௌதிக விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வகத்தின் ஒரு பகுதி



ஐன்ஸ்டைனின் கொள்கை

## லீசா பாத் ஃபைண்டர்

ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்திற்குரிய லீசா பாத் ஃபைண்டர் எனும் ரொபோ ஆய்வுக்கலம் கடந்த வருடம் விண்வெளிக்குச் சென்றது. எதிர்காலத்தில் விண்வெளியில் ஈர்ப்புச் சக்தியை கண்டுபிடிப்பதே லீசா பாத் ஃபைண்டர் கலத்தின் நோக்கமாகும். விண்வெளி ஈர்ப்புச் சக்தியின் கீழ் நிகழும் செயற்பாடுகள் தொடர்பான கொள்கையை வெளியிட்டவர் விஞ்ஞானி ஐன்ஸ்டைன் ஆவார். ஆகவே, இவர் வெளியிட்ட கொள்கை சம்பந்தமான ஆதாரங்களை சேகரிப்பதற்கும் நிரூபிப்பதற்கும் தேவையான விடயங்களைத் தேடுவதே, லீசா பாத் ஃபைண்டர் ஆய்வுக்கலத்தின் நோக்கமாகும். ஆக, ஐன்ஸ்டைனின் கொள்கை முன்வைக்கப்பட்டு 101 வருடங்கள் கடந்த பின்னரே, அது குறித்த முக்கிய நிகழ்வும் வெளிப்பாடுகளும் இடம்பெற்றுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரவால் கறுப்புச் சின்னான்



விஞ்ஞானப் பெயர்: *Hypsipetes ganeesa humii*
ஆங்கிலப் பெயர்: Square-tailed black bulbul
சிங்களப் பெயர்: கළු කොණ්ඩයා

சதுரவால் கறுப்புச் சின்னான் பறவைகள் Pycnonotidae குடும்பத்தைச் சேர்ந்த, மரங்களில் வந்தடையும் (passerine) பறவையினங்களில் ஒன்றாகும். இப்பறவைகளை இலங்கையிலும் தென் மேற்கு இந்தியாவிலும் காணலாம். மிதவெப்ப மண்டலக் காடுகள் அல்லது வெப்ப மண்ட மலைசார் ஈரளிப்புக் காடுகள் இவற்றின் வாழ்விடங்களாகும். 21-24 செ.மீற்றர் வரையான உடல் அளவைக் கொண்டுள்ள இவற்றின் உடல் பகுதி கறுப்பு மற்றும் சாம்பல் நிறம் கலந்து காணப்படும். இப்பறவைகளின் தலைப்பகுதியில் கருங் கொண்டை காணப்படும். பொதுவாக, மரக்கிளை களின் உச்சியில் இருந்த வாறு அதிக சத்தம் எழுப்பும் சதுரவால் கறுப்புச் சின்னான்கள், பழங்களையும் விதை களையும் உட்கொள்ளும்.



மனித வாழ்க்கைக்கு மிகவும் உகந்த - ஆரோக் கியமான சுற்றாடல் எமது நாட்டில் காணப்படுகின் றது. எனினும், அண்மைக்காலத்திலிருந்து எமது நாட்டு மக்களின் ஆரோக்கிய நிலையில் பாதிப்பு கள் ஏற்பட்டு வருவதைக் காணலாம். புற்றுநோய், சிறுநீரகக் கோளாறுகள், கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், இதய நோய்கள், நீரிழிவு நோய் என்று பலவிதமான தொற்றாத நோய்களுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் உட்பட்டு வருகின்றனர். இதற்கான காரணம், நாம் சுற்றாட லுக்கு ஏற்படுத்தி வரும் பாதிப்புகளே ஆகும்.

## நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேற்கொண்டு



# உடல் நலம் பேணுவோம்

விவசாய நிலங்களில் அமோக விளைச்சலைப் பெறும் நோக்கில் ரசாயன உரங்களின் பாவனை எமது நாட்டில் அதிகரித்து வருகின்றது. அந்த ரசாயனங் கள் நீர்நிலைகளில் கலக்கும் சந்தர்ப்பங்களும் அதிகம். எனவே, ரசாயன உரப் பாவனையில் வளர்ந்த மரக்கறிகளை நாம் உட்கொள்வதனாலும், நீர்நிலைகளிலிருந்து நீரைப் பருகுவதனாலும் அவற்றி லுள்ள நச்சுக்கள் எமது உடலில் சேர்கின்றன. இதனால், பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகின் றோம்.

### நச்சுத்தன்மை எப்படி எமது நாட்டில் உருவானது?

சுமார் 60 ஆண்டுகளாக எமது சுற்றாடலில் நச்சுத் தன்மை சேர்க்கப்பட்டு வருகின்றது. பாரம்பரிய விவசாய முறையினைப் பின்பற்றி விவசாயம் செய்வதை தவிர்த்து, இயற்கை உரப் பாவனைகளிலிருந்து விலகி, நச்சுத்தன்மை கொண்ட களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள், ரசாயன உரங்கள் என்பனவற்றின் பாவனைகளுக்கு நாம் பழக்கப்பட்டுவிட்டோம். ஆக, இவைதான் இன்று நாம் எதிர்நோக்கும் பாதிப்புகளுக்கு காரணமாக உள்ளன. எமது விவசாய நிலங்களில் நச்சுத் தன்மை கொண்ட பயிர்களே வளர்க்கப்படுகின்றன. நச்சுத் தன்மை கொண்ட பூச்சிக்கொல் லிகள் தெளிக்கப்பட்டும் ரசாயன உரங்களில் வளர்க்கப் பட்டும் அறுவடை செய்யப் பட்ட உணவுப் பயிர்களே, இன்று சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன.அவற்றையே நாம்கொள்வனவு செய்து உட்கொள்கின்றோம். இதனால் எமது மக்கள் பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே, நாம் இயன்றள வுக்கு நச்சுத்தன்மையற்ற உணவுகளை நுகர்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான ஒரு தீர்வாக வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள், கீரை வகைகள், கிழங்கு வகை களை நாமே பயிரிட்டு பயன் பெறலாம். இயற்கை விவசா யத்தின் அவசியத்தையும் இயற்கை உரவகைகளின் நன்மைகளையும் பற்றி பிறருக்கு எடுத்துக் கூற வேண்டும். ரசாயன உரப் பாவனையி னால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பிறரை தெளிவு படுத்த வேண்டும். எனவே, இயற்கை விவசாய முறையை மேற்கொண்டு மண் வளம் காப்பதோடு, உடல் நலத்தையும் பேணிடு வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் கமலுக்கும் அப்பாவுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

කමල්: තාත්තේ! අවුරුද්දට තාත්තාට නිවාඩු නේද?
தாத்தே! அவுருத்தட்ட தாத்தாட்ட நிவாடு நேத?
கமல்: **அப்பா! புது வருடத்திற்கு அப்பாவுக்கு விடுமுறை அல்லவா?**

තාත්තා: ඔව් පුතා. ඇයි?
ஒவ் புதா. எய்?
அப்பா: **ஆம் மகன். ஏன்?**

කමල්: සරත් අවුරුදු නිවාඩුවට එයාලගේ ගෙදර එන්න කිවුවා.
சரத் அவுருது நிவாடுவட்ட எயாலகே கெதர என்ன கிவுவா.
கமல்: **சரத் புதுவருட விடுமுறைக்கு அவர்களின் வீட்டுக்கு வரச்சொன்னான்.**

තාත්තා: සරත්ලා දැන් මෙහෙ නැහැ නේද?
சரத்லா தென் மெஹெ நெஹெ நேத?
அப்பா: **சரத் இப்போது இங்கே இல்லை அல்லவா?**

කමල්: ඔව් තාත්තේ. එයාලා ගාල්ලට ගියානේ.
ஒவ் தாத்தே. எயாலா கால்லட்ட கியானே.
கமல்: **ஆம் அப்பா. அவர்கள் காலிக்குச் சென்றார்கள்தானே.**

තාත්තා: එහෙනම් ගාල්ලට ද එන්න කියන්නේ?
எஹெனம் கால்லட்ட த என்ன கியன்னே?
அப்பா: **அப்படியென்றால் காலிக்கா வரச் சொல்கிறான்?**

කමල්: ඔව් තාත්තේ. එහේ බලන්න තැනුත් තියෙනවලු.
ஒவ் தாத்தே. எஹே பலன்ன தெனுத் தியெனவலு.
கமல்: **ஆம் அப்பா. அங்கே பார்ப்பதற்கு இடங்களும் இருக்கின்றனவாம்.**

තාත්තා: දැන් කවුරු කවුරු ද යන්නේ?
தென் கவுரு கவுரு த யன்னே?
அப்பா: **இப்போது யார் யாரெல்லாம் போகிறீர்கள்?**

කමල්: රාජායි සුනිලුයි.
ராஜாய் சுனிலுய்.
கமல்: **ராஜாவும் சுனிலும்.**

තාත්තා: එහෙනම් අවුරුදු ඉවරවෙලා ගිහින් එමු.
எஹெனம் அவுருது இவரவெலா கிஹின் எமு.
அப்பா: **அப்படியென்றால் புது வருடத்திற்குப் பின்னர் போய் வருவோம்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. புது வருடத்திற்கு விடுமுறை.
.............................................
2. வீட்டுக்கு வரச் சொன்னான்.
.............................................
3. யார் யாரெல்லாம் போகிறீர்கள்?
.............................................




## எதிர்கால வாக்கியம்
## Future tense

**Will** சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களினதும் மற்றும் **'going to'** சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களினதும் வினா நிலையில் காணப்படுகின்ற வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) Will your brother meet the principal?
உனது சகோதரன் அதிபரை சந்திப்பானா?

ஆ) Is your brother going to meet the principal?
உனது சகோதரன் அதிபரை சந்திக்கப் போகின்றானா?

★ Will your brother meet?
உனது சகோதரன் சந்திப்பானா?

★ Is your brother going to meet?
உனது சகோதரன் சந்திக்கப் போகின்றானா?

★———★———★———★

இ) Will your sister buy a hand-bag?
உனது சகோதரி கைப்பை ஒன்று வாங்குவாளா?

ஈ) Is your sister going to buy a hand-bag?
உனது சகோதரி கைப்பை ஒன்று வாங்கப் போகின்றாளா?

★ Will your sister buy?
உனது சகோதரி வாங்குவாளா?

★ Is your sister going to buy?
உனது சகோதரி வாங்கப் போகின்றாளா?

★———★———★———★

உ) Will your father do that work?
உனது தந்தை அந்த வேலையை செய்வாரா?

ஊ) Is your father going to do that work?
உனது தந்தை அந்த வேலையை செய்யப் போகின்றாரா?

★ Will your father do?
உனது தந்தை செய்வாரா?

★ Is your father going to do?
உனது தந்தை செய்யப் போகின்றாரா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோல்வி முகத்திலிருந்து வெற்றிப் பாதைக்கு வந்த மே.இ. தீவுகள்...!




## சிக்ஸர்களை வழங்கிய கொடை வள்ளல்....






**T20** உலகக் கிண்ணத்தை மேற்கிந்திய தீவுகள் அணி சுவீகரித்து செம்பியன் பட்டத்தை சூடிக்கொண்டுள்ளது. கிரிக்கெட் துறை விமர்சகர்கள் எவராலுமே சுட்டிக் காட்டப்படாத ஓர் அணி செம்பியன் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிரிக்கெட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதற்கு மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றியும் ஒரு சான்றாகிவிட்டது.

ஆப்கானிஸ்தான் அணியிடம் தோல்வியுற்ற அணி, அரையிறுதியில் இந்தியாவிடம் தோற்றுவிடுமோ என்றவோர் நிலையிலிருந்து மீண்டு வந்து இறுதியில் போட்டிக்குத் தெரிவாகி இறுதிப் போட்டியிலும் தோல்வி முகத்தை நெருங்கிக்கொண்டிருக்கையில் திடீரென வெகுண்டெழுந்து சிக்ஸர்களை விளாசி வெற்றிக் கனியை பறித்துக்கொண்ட ஆச்சரியமான அணியாக மாறிவிட்டது மே.இ.தீவுகள் அணி.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மே.இ. தீவுகள் அணி 19.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கைத் தொட்டது.

இதில் ஒரு கட்டத்தில் கடைசி ஓவரில் 19 ஓட்டங்களைப் பெற வேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சமுவெல்ஸ் மற்றும் பிரத்வெரிட் ஆகிய இருவரும் அடுத்து என்ன செய்யவுள்ளனர் என்பதே கேள்விக் குறியாக இருந்தது. அந்த இறுதி ஓவரை வீசிய ஸ்டோக்ஸின் பந்துவீச்சை 4 சிக்ஸர்களாக பிரத்வெயிட் விளாசித் தள்ளியமை போட்டியின் போக்கையே மாற்றிவிட்டது.

இறுதி ஓவரை வீசிய ஸ்டோக்ஸ் பொறுப்புணர்வுடன் தான் பந்தை வீசினாரா என்றவோர் கேள்வியும் எழவே செய்தது. 6 பந்துகளில் 19 ஓட்டங்கள் பெறவேண்டும் என்பது உண்மையில் துடுப்பாட்ட வீரர்களை விட, பந்து வீச்சாளருக்கே சாதகமான ஒரு கட்டமாகும். அந்த நிலையிலும் ஸ்டோர் சமயோசிதமாகப் பந்துகளை வீசியிருந்தால் வெற்றியை இங்கிலாந்திற்கு சாதகமாக திருப்பியிருக்கலாம்... ஆனால், அவர் ஓட்டம் எடுப்பதை தடுப்பதற்குப் பதிலாக விக்கெட்டை வீழ்த்துவதிலேயே குறியாக இருந்து பந்து வீசியதைக் காண முடிந்தது. கிட்டத்தட்ட அவரது அனைத்துப் பந்துகளும் ஒரே விதமாகவே பிட்ச் ஆயின. அதுவே துடுப்பாட்ட வீரருக்கு சாதகமாக அமைந்தது. இறுதியில் சிக்ஸர்களை வாரி வழங்கும் கொடை வள்ளல் போல் ஆகிவிட்டார் ஸ்டோக்ஸ். இக்கட்டான ஒரு கட்டத்தில் கடைசிவரை போராடி வெற்றி பெற்ற மே.இ.தீவுகள் அணியினர் பாராட்டுக்குரியவர்களே.

### நம்மைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றனர்

**-சமி**

முதலில் இறைவனுக்கு நன்றி கூறவேண்டும். வெற்றிக்காக நாங்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தோம். இந்த வெற்றியை நீண்ட காலத்திற்கு தற்காத்துக் கொள்வதற்கு நாம் பாடுபடுவோம். நமக்கு எவருமே போதிய வாய்ப்பை வழங்கவில்லை.



ஆனாலும், ஒவ்வொரு போட்டியிலும் அணியின் சார்பாக யாரேனும் ஒருவர் எழுச்சிகொண்டு அணியின் வெற்றிக்கு வழி அமைத்தனர். போட்டித் தொடரில் நாம் காட்டிய திறமையைப் பார்த்து அனைவரும் ஆச்சரியப்படுகின்றனர்.

### வார்த்தைகளால் கூற முடியாது

**-பிராத் வெயிட்**

நாம் வெற்றியீட்டியமைக்கு இறைவனுக்கு நன்றி. மாலனின் (செமுவெல்ஸ்) போராட்டத்திறமை மிக அற்புதம். அதனை உண்மையில் வார்த்தைகளால் கூறமுடியாத அளவிற்கு உன்னதமாக இருந்தது. நமது 19 வயதுக்கு கீழானோரின் அணியும் இதே, சாதனையை நிகழ்த்தியது, நமது மகளிர் அணியும் நிகழ்த்தியது, தற்போது நாமும் நிகழ்த்தியுள்ளோம்.



### தோல்வியை தாங்கிக் கொள்வோம்

**-மோகன் (இங்கிலாந்து அணித் தலைவர்)**

இறுதி ஓவர் வரையில் போட்டியின் முடிவு தீர்மானம் இன்றியே இருந்தது. ஆனாலும், நாம் போட்டியை வெல்லும் மட்டத்திலேயே இருந்தோம். இதனை விசேஷமான ஒரு சம்பவமாக மட்டுமே நான் பார்க்கிறேன். நாம் நமது வெற்றியை கொண்டாடுவது போலவே, தோல்வியையும் தாங்கிக்கொள்கின்றோம். மே.இ. தீவுகள் அணிக்கு எனது வாழ்த்துக்கள். அவர்கள் எங்களைவிட சிறப்பாக போட்டியிட்டனர்.



### இந்திய கிரிக்கெட் சபை நன்றாக கவனித்தது...

**-பிராவோ**

நமக்கு மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் சபையின் எந்தவொரு அதிகாரியோ, பணிப்பாளரோ ஒரு தொலைபேசி அழைப்பைக்கூட ஏற்படுத்தவில்லை. அது நல்ல செயல் அல்ல. நாம் இந்த போட்டியை வெல்வோம் என்பதை அவர்கள் எதிர்பார்த்திருக்கவும் இல்லை. நாம் வெற்றியடைவதை காண்பதற்கு அவர்கள் விரும்பவுமில்லை என்பது நன்றாக எமக்குத் தெரியும்.

இந்திய கிரிக்கெட் சபை எமக்கு நன்றாக ஒத்துழைப்புத் தந்தது. நம்மை அவர்கள் நன்றாகக் கவனித்தனர். இந்தியர்கள் எம்மீது மிகவும் அன்பு செலுத்துகின்றனர். கரீபியன் மக்களை ஒன்றிணைப்பதில் கிரிக்கெட்தான் முக்கிய பங்கு வகிக்கின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உரோமப் பேரரசை உருவாக்கிய ஜூலியஸ் சீசர்

உரோம இராச்சியத்தில் புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவித்த பெருமை ஜூலியஸ் சீசரையே சாரும். வீரமுள்ள போர்த் தளபதியான ஜூலியஸ் சீசர் முகம்கொடுத்த சகல போர்களிலும் வெற்றிபெற்றார். அது மட்டுமன்றி, புகழ்பெற்ற ஜூலியன் நாட்காட்டியை உருவாக்குவதில் தலைமை தாங்கியவரும் ஜூலியஸ் சீசரே. அவரைப் பற்றிய சில தகவல்கள்





### தோற்றம்

கி.மு. 100 ஜூலை மாதம் கிரேக்கத்தின் உரோம் நகரில் உயர் வம்ச குடும்பத்தில் பிறந்தார்.
தந்தை-கேயுஸ் சீசர்.
தாய் - அவுரெலியா



### இளமைக்காலம்

சீசரின் 16 ஆவது வயதில் தந்தை காலமானார். குடும்பப் பொறுப்பு சீசரின் வசமானது. கி.மு. 84 இல் கொர்னேலியா என்பவரை திருமணம் செய்தார்.



### இராணுவத்தில் இணைவு

கி.மு. 80இல் உரோம இராணுவத்தில் இணைந்து போர்ச் சேவைகளில் ஈடுபட்டார். உரோமின் உயர் கௌரவ விருது இவருக்குக் கிடைத்தது.



மத்தியதரைக் கடலில் கடற்கொள்ளையர்களிடம் பிடிபட்டார். கப்பம் செலுத்தி அவர்களிடம் இருந்து விடுதலை பெற்றார். பின்னர் அவர்களைத் தேடிச்சென்று கொன்றொழித்தார்.



"நாம் பிரார்த்திப்பது நாம் இலகுவில் நம்பிக்கை கொள்வதை குறித்தாகும். அதேபோல் நாம் எம்மைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது ஏனையோரின் எண்ணங்களையும் மறைக்கின்றோம்"



### யுத்தம் புரிதல்

கி.மு. 74 இல் தனியார் இராணுவம் ஒன்றை உருவாக்கினார். அப்போது உரோமாபுரியை ஆக்கிரமிக்க வந்த ஆறாம் கியூபேடொர் மன்னனுடன் போரிட்டார்.



### அரசியல் செயற்பாடுகள்

உரோமுக்கு வந்து உரோம சாதினனாக இருந்த பொம்பே அவர்களுடன் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார்.

### கவுன்சிலுக்கு தெரிவானமை

கி.மு. 59 இல் உரோம் கவுன்சிலுக்கு தெரிவானார். பொம்பே மற்றும் க்ரேசுஸ் அவர்களுடன் இணைந்து செயல்பட்டார். இதன்போது அவர்கள் மூவரினதும் பேரரசாக உருவானது.





"அஞ்சுபவர்கள் உண்மையான மரணத்திற்கு முன் பல சந்தர்ப்பங்களில் இறக்கிறார்கள்" என ஒருமுறை சீசர் கூறியிருந்தார்.

### பேரரசுவாதம்

கி.மு. 45 இல் உரோமுக்கு வந்தார். தான் உயிருடன் இருக்கும் வரை உரோமின் பேரரசன் என தன்னை பிரகடனப்படுத்தினார். அவரின் ஆட்சியின் கீழ் உரோமில் ஏராளமான அரசியல் சமூகச் சீர்த்திருத்தங்கள் நிகழ்ந்தன.

### கொலை

அரசியல் எதிரிகள் கி.மு. 44 இல் உரோம கவுன்சிலில் அவரை கத்தியால் குத்திக் கொன்றனர்.



### எகிப்துக்கு எதிராக

கி.மு. 47 இல் எகிப்தை ஆட்சி செய்த கிளியோபெட்ரா அரசிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்து எகிப்தை ஆக்கிரமித்தார்.

"நான் வந்தேன். நான் கண்டேன். நான் ஆக்கிரமித்தேன்" யுத்த வெற்றியின்போது சீசர் கூறியவை.



### உரோமின் உள்நாட்டுப் போர்

அதிகாரத்தில் இருந்த க்ரேசுஸ் உயிரிழந்தார். அத்தோடு கி.மு. 49 இல் பொம்பேயுடன் யுத்தம் புரிந்து வெற்றி கண்டார்.




17. கி.மு. 55 இல் பிரித்தானியா ஆக்கிரமிப் பொன்றை மேற்கொள்ள முயற்சித்த போது சீசருடன் நட்புறவுடன் விளங்கிய பிரான்ஸ் மேலும் பாதுகாக்கப்பட்டது. சீசரின் தலைமைத்துவமும் உறுதிப்படுத்தப்பட்டது.

### ஆக்கிரமிப்பை நீடித்தல்

கி.மு. 58 இல் பிரான்சுக்கு சொந்தமான கோல் நாட்டினை ஆக்கிரமிக்க முனைந்த ஜெர்மனியுடன் சீசர் போர்த்தொடுத்தார். பின் கோல் நாட்டின் ஆள்பதியானார்.


-(அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 183



### மேலிருந்து கீழ்

01. உச்சிப் பொழுது.
02. அரசன். (குழம்பியுள்ளது)
05. ஓடம். (குழம்பியுள்ளது)
06. இந்திய தேசம். (குழம்பியுள்ளது)
07. உழவன்- எதிர்ப்பாற் சொல். (குழம்பியுள்ளது)
08. தமது.

### இடமிருந்து வலம்

01. நல்ல + நடத்தை.
02. தாவர வளர்ச்சியில் இந்த வளமும் பங்களிப்புச் செய்கிறது. (மாறியுள்ளது)
03. பாய்.
04. பனாட்டு செய்யப் பயன்படும் பழம்.
06. தேர் ஓட்டுபவன். (குழம்பியுள்ளது)
09. தர்மம் - எதிர்ப்பதம்.

### குறுக்கெழுத்துப் போட்டி: 182 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ந | 2 க | ச் | சு | ற் | று |
| 3 வீ | தி | | 4 மா | | |
| ன | | | | டை | 5 ச |
| ம் | | 6 க | ட | 7 க | ம் |
| | 8 ஒ | ர | ம் | | ச் |
| | டை | ட் | 9 மு | ழை | 10 கூ |

### பொருத்தமான நிழற்பிரதியுடன் இணைக்க



## விஜய் அறிவுக்கு விருந்து




### இடைவெளிகளை நிரப்புக




c__ke
m__us__e
__am
pi__
__ce cre__m
j__lly
ta__t
ju__ce
sal__d


### எத்தனை உள்ளன?



வட்டங்கள் =
சதுரங்கள் =
நீள்வட்டங்கள் =
செவ்வகங்கள் =
முக்கோணிகள் =


### வழி காட்டுங்கள்






### அறிவுக்கு விருந்து (30.03.2016) விடைகள்

| | |
|---|---|
| Blue நீலம் | Eight எட்டு |
| Flower மலர் | Hear செவிமடு |
| Ant எறும்பு | Meat மாமிசம் |
| Boat படகு | Mail அஞ்சல் |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஹ/சென்.ஜோசப் கல்லூரி மாணவனான எம்.எஸ்.எம். அம்மார், 2015 மாகாண மட்டத்திலான பிரிவு 1 இற்கான தமிழ்மொழித் தின எழுத்தாக்கப் போட்டியில் மத்திய மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

# உடையும் நடத்தைகளும்



நாம் அணியும் உடைகள் எமது மன நிலைகள், குணாதிசயங்களை ஓரளவாவது எடுத்துக்காட்டுகின்றன.

சிலர் தமது பொருளாதார வசதிக்கு ஏற்பவும் ஏனைய வர்களைக் கவரவும் உடைகளை அணிகின்றனர். பெரும்பாலும் அவை நாகரிகமானதாகவோ அல்லது பெறுமதியான உடைகளாகவோ இருக்கலாம். அனேகமாக உடைகள் சூழ்நிலைக்கு ஏற்பவே அணியப்படுகின்றன.

இவ்வாறே, சீருடைகளும். தொழில் மற்றும் பதவிகளுக்கு ஏற்ப அணியப்படுகின்றன. பாடசாலை சீருடைகள் பாடசாலைகளை அடையாளப்படுத்துவதுடன், பிள்ளைகளுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலைகள் இணங்காட்டப்படாதிருப்பதற்காக அணியப்படுகின்றன.

இதனால்தான் ஒரே மாதிரியான வெள்ளை நிற சீருடைகள் பாடசாலைகளில் அணியப்படுகின்றன. இத்தகைய உடைகள் எளிமையாகவும் தூய்மையாகவும் அணியப்படுவது சிறப்பானதும் அவசியமானதுமாகும்.



சிலர் நேர்த்தியான, நாகரிகமான உடைகளை அணிவதன் மூலமாக அனைவரையும் கவர விரும்புவர். ஆனால், பண்பான நடத்தைகளை மறந்து விடுவர். அனேகமாக, ஒழுக்கமான, பண்பான நடத்தைகளுடன் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் உடைகளை அணிபவர்களே அனைவரையும் நிரந்தரமாகவும் விரைவாகவும் கவர்ந்து விடுகின்றார்கள்.



# மிக மெல்லிய சூரிய மின் தகடு

சூரிய மின் தகடுகள் தற்போது கனமான சிலிக்கன் மற்றும் கண்ணாடி போன்றவற்றினாலேயே தயாரிக்கப்படுகின்றன. இதனால், அதன் பாரம் மற்றும் இடத்திற்கிடம் எடுத்துச் செல்வதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. இத்தகைய பிரச்சினைகளுக்கு நிவர்த்தியாக மிக மெல்லிய வினைத்திறன்கூடிய சூரிய மின் தகடு ஒன்றினை அமெரிக்காவைச் சேர்ந்த எம்.ஐ.டி. ஆராய்ச்சி மையம் கண்டுபிடித்துள்ளது.

இத்தகைய சூரிய மின் தகடுக்கு அதிகளவான சூரிய ஒளி தேவைப்படுவதில்லை. இதன் தடிமன் இரண்டு மைக்ரோ மீற்றராகும். இதன்மூலம் அறை வெப்பநிலையில் மின்சாரத்தினை உற்பத்தி செய்ய முடியும். காலப்போக்கில் நீடித்த வலுவான சூரிய மின் உற்பத்தியை இதன்மூலம் மேற்கொள்ள முடியும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவற்றினை லேமினேட்டிங் போலவும் வளைந்து கொடுக்கும் மிக மெல்லிய கண்ணாடிகள் போலவும் மின்சக்தி தேவைப்படும் சாதனங்களில் பொருத்திப் பயன்படுத்தலாம்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



வி.யோய்பரன்,
புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.




பி.கவிஷா, கவிஷான்,
பரிசுத்த திருத்துவ அ.பிரிவு பாட.,
நுவரெலியா.




க.மகதி,
யா/புனித திரேசா ம.கல்., அச்சுவேலி.



சு.சமிக்ஷா,
புனித அன்னம்மாள் ம.வித்.,
கொழும்பு-13.



எஸ்.ஸமித்தா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட.,
பாண்டிருப்பு-02.



பு.நவீன்,
சித்தி விநாயகர் இந்து கல்.,
மன்னார்.





எம்.அத்னான்,
அக்/அல்-பஃறியா வித்.,
பொத்துவில்.



செ.நிசாந்தன்,
கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்.,
வவுனியா.



ஞா.பவதாரணி,
நு/வ/மக ஊவா தமிழ் வித்.,
நுவரெலியா.



எஸ்.சாஜித்,
மதீனா தேசிய பாட.,
கெகுணகொல்ல.

ம.அகலவன்,
மு/பாரதி வித்., வள்ளுவர்புரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்கள்

# பராக் ஒபாமா



உலகின் வல்லரசு நாடான ஐக்கிய அமெரிக்காவின் குடியரசு தலைவரான பராக் ஒபாமா ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி 1961 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் கேன்சஸ் என்னும் மாநிலத்தில் பிறந்தார். கென்யா நாட்டினைச் சேர்ந்த பராக் ஹுசைன் ஒபாமா (தந்தை) அமெரிக்க பெண்ணான ஆன் டன்ஹம் (தாய்) ஆகியோரே ஒபாமாவின் பெற்றோர்களாவர்.

கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்தும் ஹவார்ட் சட்டக் கல்லூரியிலிருந்தும் பட்டங்களைப் பெற்ற ஒபாமா சிக்காகோவின் தெற்குப் பகுதியில் சமுதாய ஒருங்கிணைப்பாளராகவும் பொதுச் சட்ட வழக்கறிஞராகவும் பணியாற்றினார். 1997 இல் இலினொய் மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 2004 வரை பதவியில் இருந்தார். அக்கால கட்டத்தில் பராக் ஒபாமா சிக்காகோ பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேலவையுடன் சேர்வதற்கு பிரச்சாரத்தை தொடங்கிய பராக் ஒபாமா 2004 ஆம் ஆண்டளவில் மக்களாட்சிக் கட்சி தேசிய சம்மேளனத்தில் ஆற்றிய சிறப்புரை தேசிய அளவில் கவனத்தை ஈர்த்ததுடன், அமெரிக்க மேலவை தேர்தலில் 70% வாக்குகளால் வெற்றியடைய காரணமாகவும் அமைந்தது.

அமெரிக்கா - ஈராக் நாட்டுடனான போரினை முடிவுக்கு கொண்டு வருதல், ஆற்றல் சுதந்திரம் அடைதல், வெளியமைப்புகளால் அரசியல்வாதிகள் மீதான தாக்கத்தை குறைத்தல், அனைவருக்கும் சுகாதார திட்டம் ஆகிய கொள்கைகளுடன் 2008 ஆம் ஆண்டு குடியரசு தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதனை தொடர்ந்து மீண்டும் 2012 ஆம் ஆண்டு தேர்தலிலும் போட்டியிட்ட ஒபாமா வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# தெரிந்து கொள்வோம்

★ உளப்பகுப்பாய்வு முறையை கண்டறிந்தவர் யார்?

சிக்மண் ஃபிரய்ட்



★ இலங்கையில் மிகக் குறுகிய காலம் பிரதமராக இருந்தவர் யார்?

விஜயானந்த தஹநாயக



★ கூகுல் நிறுவனத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட அதிவேக செயற்றிட்ட பலூன்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?



செயற்றிட்ட லூன் (Project Loom)




★ உலக பொருளாதார மாநாடு எந்த நகரில் நடைபெறுகின்றது?

'டாவோஸ்' நகரில் நடைபெறுகின்றது



★ இலங்கையில் மூன்று வகையான பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி நடைபெறுகின்றது. அவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

i. உயர் நிலத் தேயிலை (High Grown)
ii. இடைநிலை தேயிலை (Medium Grown)
iii. தாழ் நிலத் தேயிலை (Low Grown)



★ இலங்கையின் தேசிய கீதம் முதன்முதலில் இசைக்கப்பட்டது எப்போது?

1950.02.04 சுதந்திர தின விழாவில்

★ ஹெய்டி நாட்டின் தலைநகர் எது?

போர்ட் பிரின்ஸ்



தொகுப்பு: உடுவை பரந்தாமன்


# வெல்லுங்கள்! விஜய் - தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD




★ 4000 English Letter Writing Software




★ 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கில கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*30.03.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*

**70 வீதம்**

**Pendrive** வெற்றியாளர்:
ச.வினுஜா,
புன்னக்குடா வீதி,
தளவாய், செங்கலடி.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

அனுப்ப வேண்டிய முகவரி:

Pen Drive போட்டி
(13.04.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு


இவ்வார கூப்பன்:
13.04.2016

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழலும் வாளியில் கொட்டாத தண்ணீர்

தண்ணீர் நிரம்பியுள்ள பாத்திரத்தினை அதில் உள்ள நீர் கொட்டாதவாறு சுழற்றுவது எப்படி? இதோ, அதை எவ்வாறு செய்வது என்று பார்ப்போம்!




### தேவைப்படுபவை:

★ பலமான பிடியினைக் கொண்ட வர்ளி ஒன்று (பிளாஸ்டிக் வாளி பொருத்தமாக இருக்கும்)

★ தண்ணீர்

★ திறந்தவெளிப் பகுதி. (நீங்கள் நனையக் கூடிய வாய்ப்புள்ளது)

### இவ்வாறுதான் செய்ய வேண்டும்

★ வாளியின் அரைவாசிப்பகுதியில் நீரை நிரப்பிக் கொள்ளுங்கள்.

★ நன்கு இடவசதி உள்ள இடத்தினை தெரிவு செய்துகொள்ளுங்கள்.

★ சுழற்பந்து வீசுவதனைப் போன்று கையில் உள்ள வாளியினை சுழற்றுங்கள். வேகமாக வாளியினை சுழற்றும் போது அதில் உள்ள நீர் வெளியே வராது.

ஆனால் உங்கள் கை சுழற்சி வேகம் குறைவாக இருப்பின் நீங்கள் நனைவதற்கு தயாராதல் வேண்டும்.

★ கைகளில் வலி உணரப்படுவதற்கு முன்பு வாளியினை மெதுவாக நிலத்தில் வைத்து விடுங்கள். அதன்பின் அவதானிக்க

நீர் நிரம்பிய வாளி உங்களது




தலைக்கு மேலாக சுழலுகின்றது போன்ற உணர்வு. இது ஏன் என்று சிந்திக்கவில்லையா?

காரணம் நீர், அசையும் திசையிலேயே வாளியும் பயணிக்கின்றது. அதேபோன்று, வாளியில் உள்ள நீரும் வாளியின் அசைவுக்கேற்பவே சுழல்கின்றது.

### இதற்கு ஒரு விஞ்ஞான விளக்கம் உள்ளது...

இதனை கேந்திரமயப் படுத்தப்பட்ட சக்தி (Centripetal Force) என்பர்.



இதற்கு பதார்த் தத்தினை மையத்தினை நோக்கி இழுக்கும், அல்லது வெளியேற்றும் பௌதீக சக்தி தேவை. வட்டமாக சுழலும் ஒரு பொருளின் மையத்தினை நோக்கிய சக்தி இதுவாகும். ரோலர் கோஸ்டர் ஒன்றிலும், கோள்களைச் சுற்றி சுழலும் செய்மதியிலும் இந்த சக்திப் பிரயோகமே காணப்படுகின்றது. இங்கு கேந்திர சக்தியாக இருப்பது ஈர்ப்புவிசையாகும்.

நியுட்டனின் முதலாவது விதி- ஒரு பொருளின் மீது வெளியக சக்தி பிரயோகம் இல்லாவிடின் அந்த பொருள் ஒன்று அசைவற்றிருக்கும் அல்லது ஒரே சம வேகத்தில் பயணிக்கும்.

நீங்கள் இவ்வாறு வாளியினை சுழற்றும்போது வாளி அப்பால் இழுபடுவது போன்று தோன்றுகின்றது அல்லவா? அதனை சுற்றுப் பாதையில் வைத்திருப்பது உங்கள் கைகளில் மையமாக இருக்கும் சக்தியாகும்.

# பஹாமாஸ்

அத்தின்லாந்திக் சமுத்திரத்தில் அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் அருகில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களைக் கொண்டதுதான் பஹாமாஸ் நாடாகும். கி.பி 1492 ஆம் ஆண்டளவில் நாடுகாண் பயணியான கிறிஸ்டோபர் கொலம்பஸ் முதன்முதலாக இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளார். கி.பி 1718 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இந்நாடு பிரித்தானியாவின் ஆளும் நாடாக உள்ளது.




டாய்னோ எனப்படும் ஆதிக் குடிகளாவார்.



டாய்னோ பரம்பரையினர் இன்றும் வாழ்கின்றனர்.




**மொழிகள்** ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி) கிரியோல், (ஹெயிட்டியில் இருந்து குடிபெயர்ந்தோர் மத்தியில்)

**சமயம்** புரட்டஸ்தாந்து 69.9% உரோமன் கத்தோலிக்கம் 12% வேறு கிறிஸ்தவர் 13%, ஏனையோர் 0.6% குறிப்பிடாதோர் 1.9%, சமயமற்றோர் 2.6%

**அரசியல்** நாடாளுமன்றக் கட்டடம்

பிரதமர் - பெரி கிறிஸ்டி



**இயற்கை வளம்** உப்பு, எரகொனைட

மொத்த நிலப்பரப்பு ச.கி.மீற்றர் $10,010\ km^2$

மொத்த சனத்தொகை 324,597



பஹாமா 700 தீவுகளைக் கொண்டுள்ளது.


பளிங்கு பாறைகள் சுற்றி அமைந்துள்ளன.

சுறாக்களை பாதுகாக்கும் திட்டம் அமுலில் உள்ளது.




பஹாமாவின் ஆட்சி அதிகாரம் பிரித்தானிய இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் கீழ் உள்ளது.

### தலைநகரமும் பெரிய நகரமும்





நாணயம் பஹாமியன் டொலர்

வருடாந்த ஜுன்கானோ விழாவுக்காக அணியும் பல்வர்ண ஆடை.



பாரம்பரிய நடனம்.



காய்கறிகள், பழவகைகள், தானியங்கள் பயிரிடப்படுவதோடு, ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

விவசாயமே பிரதான வருமானமாகும்.

உணவு தேவைக்காக மிருகங்கள் வளர்க்கப்படுகின்றன.

மீன் வளம் கொண்ட நாடு.



சுற்றுலாத் துறை உயர் நிலையில் காணப்படுகின்றது.



கடலில் இருந்து மேற்கொள்ளப்படும் கரையோரமற்ற வங்கி மற்றும் சர்வதேச நாணய பரிமாற்ற வசதிகள் உள்ளன.

தாவரங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்தி புகழ்பெற்றது.

மசகு எண்ணெய் சுத்திகரிப்பு கைத்தொழில்களில் ஒன்று.




பிளாஸ்டிக் உற்பத்தி செய்யப்படுகின்றது.

கிரேக்க ஓர்த்தடொக்ஸ் தேவாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளி மாசடைவினால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 9 ஆயிரத்துக்கும் மேலாக குறைமாத சிசுக்கள் இறப்பதாக ஆய்வுகள்மூலம் தெரிய வந்துள்ளது. இதனால், வளி மாசடைதலை குறைப்பதற்கு துரிதமாக நடவடிக்கைகளை எடுக்குமாறு லண்டன் உயர் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனை அடுத்து லண்டன் அதிகாரிகள் வளி மாசடைவைக் கணிக்க புறாக்களைப் பயன்படுத்தவுள்ளனர்.

# லண்டனில் வளி மாசடைதலைக் கணிக்கும் புறாக்கள்



## உணர் கருவிகளைப் பொருத்தல்

லண்டன் நகர அதிகாரிகள் வளிமாசடைவினைக் கணிப்பதற்கு புறாக்களுக்கு கணினி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட உணர் கருவிகளைப் பொருத்தியுள்ளனர். இதனூடாக செய்மதி மற்றும் உலகளாவிய வலையமைப்பின் அடிப்படையில் லண்டன் நகர காற்றானது பரிசோதித்துப் பார்க்கப்படுகின்றது.

## நாஸாவின் வரைபடம்

தற்போது நாஸா நிறுவனம் தமது பூமி கண்காணிப்பகத்தினைப் பயன்படுத்தி வளி மாசடைவு அதிகம் நிகழும் பிரதேசங்களைக் காட்டும் உலக வரைபடத்தினை வரைந்துள்ளது.





## நச்சு துணிக்கைகள்

வளியில் கலந்துள்ள மெல்லிய நச்சு துணிக்கைகளால் வளி மாசடைந்துள்ளது. இவை 2.5 மைக்ரோமீற்றரை விட குறைவான தூசுக்களினால் உருவாகின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள். இவை மிகவும் சிறிய அளவு என்பதனால் இதனை பார்ட்டிகியுலேற் மெற்றர் 2.5 என்றும் பிஎம் 2.5 என்றும் அழைக்கின்றனர். இவை இலகுவில் மனிதர்களின் சுவாசப் பாதைக்குள் பிரவேசித்து மோசமான நோய்களை ஏற்படுத்துகின்றன என விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

## பிஎம் 2.5

பிஎம் 2.5 என்ற துணிக்கைகள் மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையிலிருந்தும், தொழிற்சாலை புகையிலிருந்தும் வீடுகள் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் இதர இயற்கை செயற்பாடுகளினாலும் வளி மண்டலத்தில் சேர்கின்றன.

## சீனாவுக்கு ஏற்பட்ட பாதிப்பு

தற்போது சீனாவின் பீஜிங் நகரில் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக, வளி மாசடைவு மோசமாக உள்ளது. இங்கு சுவாசிக்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர். இதனால் கனடாவிலிருந்து போத்தலில் அடைக்கப்பட்ட சுத்தமான காற்றினை இறக்குமதி செய்ய சீன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். கனடாவின் 'வைற்லி எயார்' என்ற சுத்தமான காற்றினை விநியோகிக்கும் நிறுவனத்திடமிருந்து இந்த கொள்வனவு நடைபெறவுள்ளது.

## சுத்தமான காற்றை விலைகொடுத்து வாங்க தயாராகின்றது சீனா

## வைற்லி எயார்

இந்நிறுவனம் கனடாவின் மலை சார்ந்த பகுதிகளில் பெற்ற சுத்தமான காற்றினைப் போத்தல்களில் அடைத்து சீன நாட்டிற்கு விநியோகிக்க தயாராகியுள்ளதாக அந்நிறுவனத்தின் பிரதானியான மொஸ்லேம் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

---

பூமத்திய ரேகைப் பகுதியில் இருக்கும் ஒரு பொருளின் நிறை துருவப் பகுதிகளுக்குச் செல்லும் போது அதிகரித்துவிடும்.

# துருவப் பகுதிகளில் நிறை அதிகரிப்பது ஏன்?

அது ஏன் என உங்களுக்கு தெரியுமா?

பூமத்திய ரேகைப் பகுதியானது, பரந்து விரிந்து இருப்பதுடன் பெருத்தும் இருக்கின்றது. இதனால், இப்பகுதி ஒருமுறை தன்னைத் தானே சுழல்வதற்கு நீண்ட நேரம் எடுப்பது மட்டுமன்றி, ஈர்ப்புவிசையும் குறைவு. அதனால், இப்பகுதிகளில் உள்ள பொருட்களின் எடை குறைவாகும்.

இதேவேளை, துருவப் பகுதியானது, குறைவான பரப்பளவுடன் இருப்பதுடன், இப்பகுதி தன்னைத் தானே சுழல்வதற்கு குறைந்த நேரம்தான் எடுக்கும். ஆனால், இங்கு ஈர்ப்பு விசை அதிகம் அதனால் இப்பகுதிகளில் உள்ள பொருட்களின் எடை அதிகம். இதன்படி ஈர்ப்பு விசை காரணமாக பூமத்திய ரேகையிலிருந்து துருவப் பகுதிக்கு பொருட்களை கொண்டு செல்லும்போது அதன் நிறையில் அதிகரிப்பை நாம் காணலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில், சீனாவின் குவாங்டோங் மாகாணத்தின் மலைப் பிரதேசத்திலிருந்து விசித்திரமானதொரு செய்தி பரவியது. அப்பகுதியில் சுத்தமான காற்று விற்பனைக்கு உள்ளது என்பதே அந்த செய்தியாகும். மலையேறுவதற்கு இப்பகுதிக்கு தினமும் ஏராளமானோர் வந்துபோகின்றனர்.

# சுத்தமான காற்று விற்பனைக்கு...



இன்று உலகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளில் ஒன்றுதான் 'காற்று மாசடைவு' ஆகும். காற்று மாசடைவினால் பாரியளவில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நாடுகளில் சீனா பிரதான இடத்தை வகிக்கின்றது.

எனவே, அந்த மலைப் பகுதிவாழ் மக்கள் சுத்தமான காற்றை பிளாஸ்டிக் பைகளில் நிரப்பி மலையேற வருபவர்களுக்கு விற்பனை செய்யத் தொடங்கினர். சிறிய பை, பெரிய பை என இரண்டு அளவுகளில் காற்று விற்பனை செய்யப்பட்டது. இந்த காற்றுப் பைகளை அங்கேயே பிரித்து சுத்தமான காற்றை சுவாசிக்கலாம் அல்லது வீட்டுக்குச் சென்றும் சுவாசிக்கலாம் என்று விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

# இவ்வார கார்ட்டூன் படம்








# மண் மற்றும் புதர்களாலான சீனப் பெருஞ்சுவர்



மண் மற்றும் புதர்களாலான சீனப் பெருஞ்சுவரின் ஒரு பகுதி

மொங்கோலியாவில் அமைந்துள்ள கோபி பாலைவனத்தில் சீனப் பெருஞ்சுவரின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மண்ணும் ஒருவகை புதர்களும் கலந்து சுமார் 100 கிலோ மீற்றர் நீளத்திற்கு இந்த சுவர் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்த வகையில், சீனாவுக்கு வெளியே சீனப் பெருஞ் சுவரின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப் பட்டமை இதுவே முதல் தடவையாகும். கி.மு. 120 ஆம் ஆண்டில் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதுப்படும் இந்த சுவர்ப் பகுதியினை பிரித்தானிய வரலாற்று ஆராய்ச்சியாளரான வில்லியம் லிண்ட்ஸே என்பவரே கண்டுபிடித்துள்ளார்.

# குருடாவது நிச்சயம்!



ஆபிரிக்கா கண்டத்தின் உப சஹாரா பாலைவனத்தில் 'ப்ளெக் நெக்ட் ஸ்பிட்டிங் கோப்ரா' (Black necked spitting cobra) என்ற நாகபாம்பினம் வாழ்கின்றது. இந்த நாகபாம்புகள் ஏனைய பாம்புகளைப் போன்று எதிரிகளைத் தீண்டுவது மிகவும் குறைவு. இதற்குப் பதிலாக இவை தமது எதிரிகளின் கண்களை நோக்கி அதன் வாயினூடாக ஒருவகை விஷத்தைப் பீய்ச்சி அடிக்கும். இந்த விஷம் கண்களில் பட்டால், அந்த உயிரினத்தின் கண்கள் குருடாகிவிடுவது நிச்சயமாம்!



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஏப்ரல் 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 13, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org